## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## ரூ. 67,500 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.50%2028 'A' தொடர்களின் கீழ் ரூ.37,500 மில்லியனையும் 11.00%2030 'B' தொடர்களின் கீழ் ரூ.30,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2025 பெப்புருவரி 13ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| தொடர்கள் | **11.50%2028 'A'** | **11.00%2030 'B'** |
|---|---|---|
| ISIN* | LKB01528I017 | LKB00730J158 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ.37,500 மில்லியன் | ரூ.30,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.50% ஆண்டொன்றிற்கு | 11.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2013 செத்தெம்பர் 01 | 2023 ஒத்தோபர் 15 |
| **முதிர்வுத் திகதி** | **2028 செத்தெம்பர் 01** | **2030 ஒத்தோபர் 15** |
| நறுக்குக் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 மாச்சு & 01 செத்தெம்பர் | 15 ஏப்பிறல் & 15 ஒத்தோபர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ.100.00 இற்கு ரூ.5.3688 | ரூ.100 இற்கு ரூ.3.7775 |
| ஏல விற்பனைத் திகதி | 2025 பெப்புருவரி 13, வியாழக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2025 பெப்புருவரி 13, வியாழக்கிழமை, மு.ப.11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2025 பெப்புருவரி 17** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து. | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

### முதனிலை வணிகர்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| இலங்கை வங்கி | 2541938 | என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | மக்கள் வங்கி | 2206783 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| எச்.என்.பீ செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 | வெல்த்ரஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

பொதுப் படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 1.
தொலைபேசி: +94112477011 தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

என். டி. வை. சி. வீரசிங்க
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்